ந.க.எண்.சஉதி—1/330/2025
நாள்.10 .04.2025

மாவட்ட ஆட்சியரகம் (சத்துணவு பிரிவு)
கள்ளக்குறிச்சி

# பத்திரிக்கைச் செய்தி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பள்ளிகளில் செயல்படும் சத்துணவு மையங்களில் காலியாக உள்ள 309 சமையல் உதவியாளர் பணியிடங்கள் நேரடியாக நியமனம் செய்யப்படவுள்ளன. வட்டாரம் வாரியாக நேரடி நியமனம் செய்யப்படவுள்ள சமையல் உதவியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை அந்தந்த வட்டார அலுவலகங்களில் இனசுழற்சி வாரியாக தெரிந்துகொள்ளலாம்.

சத்துணவு மையங்களில் சமையல் உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்படுவோருக்கு தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படும் பணியாளர்களுக்கு ஒராண்டு கால பணிக்குப்பின்பு சிறப்பு காலமுறை ஊதியத்தில் (ஊதிய நிலை 1 (Level of Pay — ரூ.3000—9000) ஊதியம் வழங்கப்படும். இப்பணிக்கு 21 வயது முதல் 40 வயதுடைய பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். வயது நிர்ணயம், அறிவிப்பு தேதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும். நியமனம் கோரும் மையத்திற்கும் விண்ணப்பதாரரின் குடியிருப்பிற்கும் இடைபட்ட தூரம் 3 கி.மீ—க்குள் இருக்க வேண்டும் (ஊராட்சி—குக்கிராமம்—வருவாய் கிராமம் போன்றவைகள் கணக்கில் எடுத்துக்கொள்ள தேவையில்லை).

காலிப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும்போது உரிய விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மட்டும் விண்ணப்பிக்க இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் 23/4/25 விண்ணப்பத்துடன் பள்ளி மாற்றுச்சான்றிதழ் SSLC மதிப்பெண் சான்றிதழ், குடும்ப அட்டை, இருப்பிடச்சான்று, ஆதார் அட்டை, சாதிச்சான்று போன்றவற்றின் நகல் இணைக்கப்பட வேண்டும். விதவை, கணவரால் கைவிடப்பட்டோர், மாற்றுத் திறனாளிகள் அதற்கான சான்றிதழ்களின் நகல்களையும் இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின்போது அசல் சான்றிதழ்களுடன் கலந்து கொள்ளவேண்டும்.

விண்ணப்பத்தினை **http://www.kallakurichi.nic.in** என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் இவ்வறிவிப்பு தொடர்பான முழு விபரங்களையும் மேற்காணும் இணைய தளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

இந்த அறிவிப்பினை ஒத்தி வைக்கவோ அல்லது ரத்து செய்திடவோ மாவட்ட ஆட்சித்தலைவருக்கு முழு அதிகாரம் உண்டு

10/4/25

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கள்ளக்குறிச்சி

செ.அ.எண்.38/ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்/2025/
செமதொஅ/கள்ளக்குறிச்சி
நாள்:11/4/25

10/04/25